நகராட்சி நிருவாகத்துறை அமைச்சர் கே.என்.நேரு திருச்சிராப்பள்ளி மாநகராட்சி எடமலைப்பட்டிபுதூர் ராஜீவ்காந்தி நகரில் ரூபாய் 18.41 கோடி மதிப்பீட்டில் புதிதாக கட்டப்பட்டு வரும் உயர்நிலைப்பள்ளியில் மேற்கொள்ளப்பட்டு வரும் பணிகளை நேற்று (28.05.2025) நேரில் பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டார். இந்நிகழ்வில் மாவட்ட ஆட்சித்தலைவர் மா.பிரதீப் குமார், மாநகராட்சி மேயர் மு.அன்பழகன், மாநகராட்சி ஆணையர் வே.சரவணன், நகரப் பொறியாளர் சிவபாதம், மண்டலத்தலைவர்கள், மாமன்ற உறுப்பினர்கள், மாநகராட்சி அலுவலர்கள், பொதுமக்கள் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.

திமுக சட்டத்துறை சார்பில் உதகையில் நீலகிரி மாவட்ட திமுக வழக்கறிஞர் அணி சார்பில், மாநில சட்டத்துறை செயலாளர் என்.ஆர். இளங்கோ எம்.பி., தலைமையில் 2026 தேர்தல் பணிகள் குறித்த பயிற்சி பட்டறை உதகை மொனார்க் ஹோட்டலில் நடைபெற்றது. மாவட்ட அமைப்பாளர் வழக்கறிஞர் சிவசுப்ரமணியம் வரவேற்றார். மாவட்ட பொறுப்பு அமைச்சர் மு.பெ.சாமிநாதன், மாவட்ட கழக பொறுப்பாளர் கே.எம்.ராஜ், கழக உயர்நிலை செயல்திட்டகுழு உறுப்பினர் பா.மு.முபாரக், தேர்தல் பணி செயலாளர் அரசு தலைமை கொறடா கா.ராமச்சந்திரன் ஆகியோர் மற்றும் மாநில சட்டத்துறை துணை செயலாளர் சரவணன், சட்டமன்ற தொகுதி பார்வையாளர்கள் பரமேஷ்குமார், தென்றல் செல்வராஜ், திராவிடமணி, மாவட்ட வழக்கறிஞர் அணி நிர்வாகிகள் சந்திரபோஸ், குயிலரசன், மணிக்குமார், கிருஷ்ணகுமார், செந்தில்குமார், ஸ்ரீஜேஷ், கீர்த்தனா ஆகியோர் முன்னிலை வகித்தனர். கூட்டத்தில் மாவட்ட கழக நிர்வாகிகள், மாநில நிர்வாகிகள், தலைமை செயற்குழு பொதுக்குழு உறுப்பினர்கள், நகரஒன்றியபேரூர் கழக செயலாளர்கள், கழக வழக்கறிஞர்கள் திரளாக கலந்து கொண்டனர்.

திருச்சி வடக்கு மாவட்டம்

தாத்தையங்கார்பேட்டை கிழக்கு, தாத்தையங்கார்பேட்டை மேற்கு, துறையூர் கிழக்கு, முசிறி கிழக்கு, முசிறி மேற்கு ஆகிய ஒன்றியங்களில் அடங்கியுள்ள ஊராட்சிகள் விவரம் - ஒன்றியக் கழக பொறுப்பாளர்கள் நியமனம்!

தலைமைக் கழகம் அறிவிப்பு!

2026ஆம் ஆண்டில் நடைபெற உள்ள சட்டமன்றத் தேர்தலை எதிர்கொள்ளும் வகையில், கழகத்தில் மேற்கொள்ள வேண்டிய மாறுதல்கள் - அமைப்பு ரீதியான சீரமைப்புகளை மாண்புமிகு கழகத் தலைவருக்கும் - தலைமைக்கும் பரிந்துரைக்கவும், தேவையான நடவடிக்கைகளை மேற்கொள்ளவும் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் கழகத் **தலைவர்** அவர்கள் அமைத்த **"தி.மு.க. ஒருங்கிணைப்புக்குழு"** ஆலோசித்து எடுத்த முடிவின்படி,

கழக நிர்வாக வசதிக்காகவும் - கழகப் பணிகள் செவ்வனே நடைபெற்றிடவும் திருச்சி வடக்கு மாவட்டத்தில் உள்ள தாத்தையங்கார்பேட்டை கிழக்கு, மேற்கு, துறையூர் கிழக்கு, முசிறி கிழக்கு, மற்றும் மேற்கு ஆகிய ஒன்றியங்கள் மறு சீரமைக்கப்படுகிறது.

அவ்வாறு பிரிக்கபட்ட தாத்தையங்கார்பேட்டை கிழக்கு, **தாந்தையங்கார்பேட்டை மேற்கு துறையூர் கிழக்கு, முசிறி கிழக்கு, முசிறி மேற்கு** ஆகிய ஒன்றியங்கள் பின்வரும் ஊராட்சிகள் மற்றும் பேரூர்கள் கொண்டதாக அமையும்.

தாத்தையங்கார்பேட்டை கிழக்கு ஒன்றியம் : 1. காமாட்சிப்பட்டி, 2. வெள்ளூர், 3. செவந்தலிங்கபுரம், 4. தண்டபுத்தூர், 5. மாவிலிப்பட்டி, 6. எம்.புதுப்பட்டி, 7. முத்தம்பட்டி, 8. பைத்தம்பாறை, 9. சிட்டிலரை, 10. ஊரக்கரை, 11. வளையெடுப்பு ஆகிய 11 ஊராட்சிகள் மற்றும் தாத்தையங்கார்பேட்டை, மேட்டுப்பாளையம் ஆகிய 2 பேரூர்கள்.

தாத்தையங்கார்பேட்டை மேற்கு ஒன்றியம் : 1. அஞ்சலம், 2. ஆராய்ச்சி, 3. தேவானூர், 4. ஜம்புமடை, 5. காருகுடி, 6. கரிகாலி, 7. கோணப்பம்பட்டி, 8. மகாதேவி, 9. பிள்ளாபாளையம், 10. பூலாஞ்சேரி, 11. சேருகுடி, 12. சூரம்பட்டி, 13. தும்பலம், 14. ஊருடையாபட்டி, 15. வாளசிராமணி ஆகிய 15 ஊராட்சிகள்

துறையூர் கிழக்கு ஒன்றியம் : 1. அபினிமங்கலம், 2. ஆதனூர், 3.அம்மாபட்டி, 4. வண்ணாடு, 5. கீரம்பூர், 6. கோம்பை, 7. கோட்டாத்தூர், 8. முத்தையம்பாளையம், 9. சொரத்தூர், 10. நடுவலூர், 11. குன்னுப்பட்டி, 12. நாகலாபுரம், 13. பகளவாடி, 14. புத்தானம்பட்டி, 15. வெள்ளக்கல்பட்டி, 16. வரதராஜபுரம் ஆகிய 16 ஊராட்சிகள்.

முசிறி கிழக்கு ஒன்றியம் : 1. கரட்டாம்பட்டி, 2. காட்டுக்குளம், 3. மண்பறை, 4. மூவானூர், 5. பெரமங்கலம், 6. புலிவலம், 7. சாத்தனூர், 8. திண்ணனூர், 9. திருத்தலையூர், 10. டி.புதுப்பட்டி, 11. வெளியனூர், 12. திருத்தியமலை, 13. வேங்கைமண்டலம் ஆகிய 13 ஊராட்சிகள்.

முசிறி மேற்கு ஒன்றியம் : 1. ஆமூர், 2. அய்யம்பாளையம், 3. ஏவூர், 4. குணசீலம், 5. ஜெயங்கொண்டான், 6. கொடுந்துறை, 7. கோமங்கலம், 8. மங்களம், 9. நெய்வேலி, 10. பேரூர், 11. சித்தாம்பூர், 12. சுக்காம்பட்டி, 13. திண்ணக்கோனம், 14. துலையாநத்தம், 15. வாளவந்தி ஆகிய 15 ஊராட்சிகள்

ஒன்றியக் கழகப் பொறுப்பாளர்கள் நியமனம்

மேற்கண்டவாறு அமையப் பெற்ற **தாத்தையங்கார்பேட்டை கிழக்கு, தாந்தையங்கார்பேட்டை மேற்கு, துறையூர் கிழக்கு, முசிறி கிழக்கு, முசிறி மேற்கு** ஆகிய ஒன்றியக் கழகப் பணிகள் செவ்வனே நடைபெற, ஒன்றியக் கழகப் பொறுப்பாளர்கள் பின்வருமாறு நியமிக்கப்படுகிறார்கள்.

தாத்தையங்கார்பேட்டை கிழக்கு ஒன்றியம்:
பொறுப்பாளர் : **கே.கே.ஆர். சேகரன்,** திருச்சி மாவட்டம்.

தாத்தையங்கார்பேட்டை மேற்கு ஒன்றியம்:
பொறுப்பாளர் : **க. பெரியசாமி,** திருச்சி மாவட்டம்

துறையூர் கிழக்கு ஒன்றியம்: பொறுப்பாளர் : **சி. சரவணன்,** திருச்சி மாவட்டம்.

முசிறி கிழக்கு ஒன்றியம்: பொறுப்பாளர் : **எஸ். கணேசன்,** திருச்சி மாவட்டம்.

முசிறி மேற்கு ஒன்றியம்: பொறுப்பாளர் : **சு. ராமச்சந்திரன்,** திருச்சி மாவட்டம்.

துரைமுருகன்
பொதுச் செயலாளர்,
தி.மு.க.

"**அண்ணா அறிவாலயம்**"
சென்னை - 18
நாள்- 28.05.2025

பல்லாவரம் சட்டமன்றத் தொகுதி பல்லாவரம் வடக்கு தெற்கு பகுதி திமுக மற்றும் செம்பாக்கம் வடக்கு பகுதி திமுக சார்பில் செயற்குழு கூட்டம் பல்லாவரம் தெற்கு பகுதி அவைத்தலைவர் வை.தா.ர.மூர்த்தி தலைமையில் வடக்கு பகுதி அவை தலைவர் இரா. சேகர் வரவேற்புரையில் நடைபெற்ற கூட்டத்தில் காஞ்சிபுரம் வடக்கு மாவட்ட கழக துணைச் செயலாளர் பல்லாவரம் சட்டமன்ற உறுப்பினர் இ. கருணாநிதி கலந்து கொண்டு ஜூன் 3 அன்று முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் பிறந்த நாள் விழாவை எவ்வாறு சிறப்பாக கொண்டாடுவது என்றும் மாவட்ட கழக கூட்டத்தில் நிறைவேற்றப்பட்ட தீர்மானம் படி வாக்குச்சாவடி வாரியாக வாக்குச்சாவடி முகவர்கள் கூட்டத்தை வட்டங்கள் தோறும் எவ்வாறு சிறப்பாக நடத்துவது என்பதை குறித்து ஆலோசனைகள் வழங்கி சிறப்புரை ஆற்றினார். மண்டல தலைவரும் பல்லாவரம் வடக்கு பகுதி கழகச் செயலாளர் இ.ஜோசப் அண்ணாதுரை பல்லாவரம் தெற்கு பகுதி கழகச் செயலாளர் இ. எஸ். பெர்னார்ட் செம்பாக்கம் வடக்கு பகுதி கழகச் செயலாளர் ஏ. கே. கருணாகரன் மாவட்ட கழக பிரதிநிதிகள் பகுதி கழக நிர்வாகிகள் வட்டக் கழகச் செயலாளர்கள் வாக்குச்சாவடி ஒருங்கிணைப்பாளர்கள் வாக்குச்சாவடி முகவர்கள் உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்.

முத்தமிழறிஞர் கலைஞர் பிறந்த நாள் விழாவை

திருவள்ளூர் கிழக்கு மாவட்டம் முழுவதும் கழக கொடி ஏற்றி சிறப்பாக கொண்டாடுவீர்!

மாவட்டக் கழக பொறுப்பாளர் – வல்லூர் எம்.எஸ்.கே.ரமேஷ் ராஜ் அறிக்கை!

திருவள்ளூர் மே 29;

முத்தமிழ் அறிஞர் கலைஞர் தன்னுடைய 14 வது வயதில் நீதிக்கட்சித் தலைவர்களில் ஒருவரான அழகிரிசாமியின் பேச்சின் பால் ஈர்க்கப்பட்டு, அரசியலில் ஈடுபடலானார். அதன் பின் இந்தி எதிர்ப்பு போரட்டத்தின் மூலம் தன் அரசியல் தீவிரத்தைக் காட்டினார். அவர் வாழ்ந்த திருவாரூர் பகுதியில் இளைஞர்களை " மாணவ நேசன் " என்ற துண்டு கையெழுத்துப் பதிப்புகள் மூலம் ஒன்று திரட்டினார். அவ்விளைஞர் அணியை பின் மாணவர் அணியாக "தமிழ்நாடு மாணவர் மன்றம்" என்ற பெயரில் உருவாக்கினார். தமிழ்நாட்டில் உருவான முதல் திராவிட இயக்க மாணவர் அணி என்ற நிலையை ஏற்படுத்தினார். கருணாநிதியும் அவரது மாணவர் அணித் தோழர்களும் பல்வேறு குடிசை வாழ் மக்களிடையே சென்று சமூக பணிகளிலும், விழிப்புணர்வு வேலைகளிலும் ஈடுபட்டனர்.

1957 இல் நடைபெற்ற திமுக இந்தி எதிர்ப்பு மாநாட்டில் தமிழ் நாட்டில் நடுவண் அரசால் இந்தி திணிக்கப்படுவதை வன்மையாக எதிர்ப்பதென தீர்மானம் நிறை வேற்றப்பட்டது. அக்டோபர் 13 , 1957 அன்றைய நாளை இந்தி எதிர்ப்பு நாளாக பெருந்திரளான மக்களுடன் அமைதியான முறையில் கடைப்பிடிப்பது என முடிவானது. இப்போராட்டத்துக்கு தலைமை தாங்கிய கருணாநிதி நடுவண் அரசின் இந்தி திணிப்பை எதிர்த்து இவ்வாறு முழக்கமிட்டார்: "மொழிப்போராட்டம்.. எங்கள் பண்பாட்டை பாதுகாக்க, இது எமது மக்களின் தன்மானம் மற்றும் எங்களது கட்சியின் அரசியல் கொள்கை.

மேலும் இந்தி என்பது உணவு விடுதியிலிருந்து எடுத்துச் செல்லும் உணவு (எடுப்பு சாப்பாடு),

ஆங்கிலம் என்பது ஒருவர் சொல்ல அதன்படி சமைக்கப்பட்ட உணவு , தமிழ் என்பது குடும்பத் தேவையறிந்து, விருப்பமறிந்து, ஊட்டமளிக்கும் தாயிடமிருந்து பெறப்பட்ட உணவு " என்று அவர் கூறினார். அக்டோபர், 1963, இந்தி எதிர்ப்பு மாநாடு சென்னையில் (மதராஸ்) கூட்டப்பட்டது. இந்தித் திணிப்பு எதிர்ப்புப் போராட்டம் நடுவண் அரசின் புரிந்து கொள்ளாமையை உணர்த்தும் விதமாக இந்திய அரசியலமைப்பு தேசிய மொழிகள் சட்ட எரிப்பு போராட்டம் நடத்து வெதென மாநாட்டில் தீர்மானிக்கப்பட்டது.

1960 ஆம் ஆண்டில் தி.மு.க.வின் பொருளாளராகத் தேர்ந்தெடுக்கப்பட்டு, 1969 ஆம் ஆண்டு வரை அப் பதவியை வகித்தார்.

1969 ஆம் ஆண்டில் தி.மு.க.வின் தலைவராகத் தேர்ந்தெடுக்கப்பட்டு, தனது மறைவு வரை 50 ஆண்டுகள் அப்பதவியை வகித்தார்

சட்டமன்ற உறுப்பினர் போட்டியிட்ட அனைத்து தேர்தல்களிலும் இவர் வெற்றிபெற்றார். ஐந்துமுறை முதலமைச்சராக இருந்தார்.

மாநிலத்தின் வளர்ச்சிக்காக, கிராமப்புறங்களில் ஒடுக்கப்பட்ட மக்களுக்காக இலவச காப்பீடு திட்டங்கள், தொழில்மயமாக்குதலுக்கான நடவடிக்கைகள் போன்ற பலவற்றையும் மேற்கொண்டார். ஐ.டி துறையை மாநிலத்தில் வளர்க்கும் விதமாக, அவருடைய பதவிக் காலத்தில், டைடல் மென்பொருள் பூங்காவை உருவாக்கினார். ஓரகடத்தில், புதிய உழுவை உற்பத்தி செய்யும் செல்லைத் தொடங்கினார், பள்ளி மாணவர்களுக்கு இலவசம் பேருந்து வசதி, தனி வாரியம் பெண்களுக்கு இலவச சொத்துரிமை உள்ளிட்ட பல்வேறு சாதனைகளை திட்டங்களையும் அறிவித்தவர்

12 முறை எம்.எல்.ஏ. 5 முறை முதலமைச்சர், 10 முறை தி.மு.க. தலைவர் என்பது மாதிரியான சாதனை இதுவரை யாரும் செய்ததில்லை.

"மண்ணைவிட்டு மறைந்தாலும் மக்கள் மனதில் வாழ்ந்து கொண்டிருக்கும் மாமனிதர்" முத்தமிழ் அறிஞர் கலைஞர் அவர்களின் ஜூன் மூன்றாம் தேதி அன்று பிறந்தநாள் விழா கொண்டாடப்படுகிறது இந்நிலையில் திருவள்ளூர் கிழக்கு மாவட்ட திமுக சார்பில் மாவட்டத்தில் உள்ள ஒன்றிய நகர பேரூர் கிளை வார்டுகளில் கழக கொடி ஏற்றி பொதுமக்களுக்கு பல்வேறு நலத்திட்ட உதவிகளை ஒன்றிய நகர பேரூர் கழகச் செயலாளர்கள் மாநில மாவட்ட கழக நிர்வாகிகள் சார்பு அணிகளின் நிர்வாகிகள் வார்டு கிளைக் கழக செயலாளர்கள் நிர்வாகிகள் அனைவரும் வெகு விமர்சையாக முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள் பிறந்த நாள் விழாவை கொண்டாட வேண்டும்.

இவ்வாறு மாவட்ட கழக பொறுப்பாளர் எம்.எஸ்.கே. ரமேஷ்ராஜ் தெரிவித்துள்ளார்.

அண்ணா பல்கலைக் கழக மாணவி வழக்கு -

ஞானசேகரன் குற்றவாளி - ஜூன் 2 இல் தண்டனை விபரம்!

சென்னை மகளிர் நீதிமன்றம் அதிரடி தீர்ப்பு!

சென்னை, மே 29-

அண்ணா பல்கலைக் கழக மாணவி வன்கொடுமை செய்யப்பட்ட வழக்கில் கைது செய்யப்பட்ட ஞானசேகரன் குற்றவாளி என சென்னை மகளிர் நீதிமன்றம் அதிரடி தீர்ப்பு வழங்கியுள்ளது. ஜூன் 2ம் தேதி தண்டனை விவரம் அறிவிக்கப்படும் என்றும் நீதிபதி தெரிவித்துள்ளார்.

சென்னை அண்ணா பல்கலைக்கழக வளாகத்தில், கடந்த ஆண்டு டிசம்பர் 23ம் தேதி பாலியல் வன்கொடுமை செய்யப்பட்டதாக பல்கலைக் கழக மாணவி ஒருவர் கோட்டூர் புரம் காவல் நிலையத்தில் புகார் அளித்தார். புகாரின் அடிப்படையில், விசாரணை மேற்கொண்ட காவல்துறையினர், ஞானசேகரனை கடந்த ஆண்டு டிசம்பர் மாதம் 24 தேதி கைது செய்தனர். பின்னர் வழக்கு விசாரணை, டிசம்பர் 28ம் தேதி பெண் ஐபிஎஸ் அதிகாரிகள் அடங்கிய சிறப்பு புலனாய்வுக்குழுவுக்கு மாற்றி சென்னை உயர்நீதிமன்றம் உத்தரவிட்டது. கடந்த ஜனவரி மாதம் 5ம் தேதி ஞானசேகரனை குண்டர் தடுப்பு சட்டத்தின் கீழ் சிறையில் அடைக்க சென்னை காவல் ஆணையர் உத்தரவிட்டிருந்தார்.

இதனிடையே வழக்கை விசாரித்த சிறப்பு புலனாய்வுக் குழு, கடந்த பிப்ரவரி மாதம் 24ம் தேதி, சென்னை சைதாப்பேட்டை 9வது நீதித் துறை நடுவர் நீதிமன்றத்தில் ஞானசேகரனுக்கு எதிராக 100 பக்க குற்றப்பத்திரிக் கையை தாக்கல் செய்தது. பின்னர் இந்த வழக்கின் விசாரணை சென்னை மகளிர் நீதிமன்றத்திற்கு கடந்த மார்ச் 7ம் தேதி மாற்றப்பட்டது. இதனையடுத்து, சென்னை மகளிர் நீதிமன்றத்தில் கடந்த ஏப்ரல் 23ம் தேதி சாட்சியங்கள் விசாரணை தொடங்கி, தினந்தோறும் விசாரணை நடத்தப்பட்டது. வழக்கில் காவல் துறை தரப்பில் 29 சாட்சிகள் நேரில் ஆஜராகி நீதிமன்றத்தில் சாட்சியம் அளித்தனர். குற்றச்சாட்டை நிரூபிக்கும் வகையில் காவல்துறை தரப்பில் சுமார் 75 சான்று ஆவணங்கள் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யபட்டது. இரு தரப்பு இறுதி வாதங்கள் நிறைவடைந்த நிலையில், இந்த வழக்கில் நேற்று தீர்ப்பு வழங்கப்பட்டது. அதில், ஞானசேகரன் குற்றவாளி என சென்னை மகளிர் நீதிமன்ற நீதிபதி ராஜலட்சுமி தீர்ப்பு வழங்கினார். ஞானசேகரன் மீதான 11 குற்றச்சாட்டுகளும் நிரூபணமாகியுள்ளதாக நீதிபதி தெரிவித்தார்.

கன்னியாகுமரி மேற்கு மாவட்டம்

முன்சிறை கிழக்கு, கிள்ளியூர் வடக்கு ஆகிய ஒன்றியங்களில் அடங்கியுள்ள ஊராட்சிகள் மாற்றியமைப்பு!

தலைமைக் கழகம் அறிவிப்பு!

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் **கழகத் தலைவர்** அவர்கள் அமைத்த "தி.மு.க. ஒருங்கிணைப்புக்குழு" ஆலோசித்து எடுத்த முடிவின்படி,

கன்னியாகுமரி மேற்கு மாவட்டத்தில் முன்சிறை கிழக்கு ஒன்றியத்தில் உள்ள **விளாத்துறை ஊராட்சி** கிள்ளியூர் வடக்கு ஒன்றியத்துடன் இணைக்கப்படுகிறது. முன்சிறை கிழக்கு ஒன்றியம் மீதமுள்ள 5 ஊராட்சிகளைக் கொண்டு தொடர்ந்து செயல்படும்.

துரைமுருகன்
பொதுச் செயலாளர்,
தி.மு.க.

"**அண்ணா அறிவாலயம்**"
சென்னை - 18
நாள்- 28.05.2025

தமிழ்நாடு மின் உற்பத்தி கழகம்
மின்னணு ஒப்பந்தப்புள்ளி அழைப்பு அறிவிப்பு

ஒப்பந்த விவரக் குறிப்பேடு எண்	ஒப்பந்தப்புள்ளி கோரும் அலுவலர்	பணியின் விவரம்
47	மே.பொ.,/கொ & நி/வ.செ.,அமி.நி	100NB SS gate valve 150 NB and 200NB stainless steel ball valves
48	மே.பொ.,/கொ & நி/வ.செ.,அமி.நி	Pulverizer Outlet Elbow assemblies including kicker blocks for HP803 bowl mills
49	மே.பொ.,/கொ & நி/வ.செ.,அமி.நி	Mechanical hopper assembly
50	மே.பொ.,/கொ & நி/வ.செ.,அமி.நி	Mill discharge valve assembly with flap for HP803 Bowl mills
52	மே.பொ.,/கொ & நி/வ.செ.,அமி.நி	SA 106 Gr C seamless 200 NB and 150 NB pipes for Debris filters
53	மே.பொ.,/கொ & நி/வ.செ.,அமி.நி	SA 106 Gr C Seamless 200 NB pipes for Fire Hydrant line in fire fighting system
54	மே.பொ.,/கொ & நி/வ.செ.,அமி.நி	Procurement of Centre Coal Feed Pipe Type II for HP 803 Bowl Mills in Unit I
55	மே.பொ.,/கொ & நி/வ.செ.,அமி.நி	Procurement of 600 NB and 450 NB Seamless pipes ACW lines in Unit I II and III

மின்னணு (e-tender) ஒப்பந்தப்புள்ளிகளின் பணி / பொருட்கள் சமர்ப்பிக்கும் / திறக்கப்படும் கடைசி நாள் மற்றும் இணையதளத்தில் காண பதிவிறக்கம் செய்யும் நாள் / நேரம் போன்ற முழு விவரங்களுக்கு கீழ்க்கண்ட இணையதளங்களை காணவும்: www.tangedco.gov.in, www.tntenders.gov.in, www.tenders.tn.gov.in

செ.ம.தொ.இ/2665/ஒப்பந்தப்புள்ளி/2025

நான்காம் ஆண்டு நினைவு அஞ்சலி

பிறப்பு: 09-02-1938 இறப்பு: 29-05-2021

Prof. திரு. **A.மனோகரன்** (வயது 83)

என்றென்றும் உங்கள் நீங்கா நினைவுகளுடன்...

மகள் : M.ஜெயந்தி சக்திசேகரன் M.Sc.,
மகன்கள் : M.உபேந்திரன் M.E.,
வழக்கறிஞர் M.ஸ்ரீதரன் B.Com., L.L.B., M.C.,
(140-வது வார்டு மாமன்ற உறுப்பினர் மற்றும் சென்னை தெற்கு மாவட்ட தி.மு.க. பொதுக்குழு உறுப்பினர்)
மற்றும் குடும்பத்தினர்.